பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 சித்திரை 12 ஞாயிற்றுக்கிழமை 25.04.2021 கதிர் 39

கடற்படையினரின் முகாம் முன்பாக

## வட்டுவாகலில் வெடித்தது குண்டு இளைஞர் பலி; ஒருவர் படுகாயம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.25

முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் வெடி பொருள் ஒன்று வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தமையோடு மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தின்போது முல்லைத்தீவு செல்வபுரத்தைச் சேர்ந்த சந்திரகுமார் திருசாந்த் என்னும் 19 வயது இளைஞன் உயிரிழந்த அதே நேரம் செல்வகுமார் சாந்தரூபன் ☞2

## போதைப்பொருள்கள் கடத்தல்; நான்கு சந்தேகநபர்கள் கைது!



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஏப்.26

இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு ஐஸ், ஹெரோயின் மற்றும் கஞ்சா போதைப் பொருள்களைக் கடத்தி வந்து விநியோகித்து வந்த பிரதான சந்தேக நபர் உட்பட நான்கு பேர் யாழ்ப்பாணம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். ☞2

## கட்டுநாயக்க விமான நிலையத்தின் மக்கள் பார்வை அரங்கு மூடல்

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் வெளியேறும் மற்றும் உள்நுழையும் பகுதியிலுள்ள பொதுமக்கள் பார்வை அரங்கு உடன் அமுலுக்கு வரும் வகையில் மூடப்படுகின்றது என விமான நிலைய நிர்வாகம் இன்று ☞2

# புதிய கொரோனா பேராபத்து! மக்களே மிகவும் அவதானம்!!



## எச்சரிக்கை விடுத்தது அரசு

**இலங்கையில் தற்போது பரவும் புதிய கொரோனா வைரஸ் பேராபத்து மிக்கது எனவும், மக்கள் சுகாதார விதிமுறைகளைக் கடைப்பிடித்து மிகவும் அவதானத்துடன் இருக்க வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்துள்ளார்.** ☞2

## கொரியத் தூதுவருடன் பவித்ரா அவசர பேச்சு!



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றைச் சமாளிப்பதில் கொரிய சுகாதாரத்துறையின் ஆதரவு குறித்து சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியராச்சி மற்றும் இலங்கைக்கான கொரிய குடியரசின் தூதுவர் ☞2

## ரிஷாத்தின் கைதுக்கு எதிராக கஜேந்திரகுமார் போர்க்கொடி!

சர்வதேச அளவில் கண்டிக்கப்பட்ட மிகவும் ஆபத்தான பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன் எம்.பி. கைது செய்யப்பட்டதை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி வன்மையாகக் கண்டிக்கின்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். ☞2



## அனைத்து நிகழ்வுகளுக்கும் இரண்டு வாரங்களுக்கு தடை

நாடளாவிய ரீதியில் நடைபெற ஏற்பாடாகியிருந்த அனைத்து நிகழ்வுகளுக்கும் இரண்டு வாரங்களுக்கு தடை விதிக்கப்படுவதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

அரச, தனியார் நிறுவனங்களால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வுகள், பொது நிகழ்வுகள் உட்பட அனைத்து நிகழ்வுகளும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நிறுத்தப்படுகின்றன. ☞2

42 பேருக்குக் கொரோனா தொற்று:

## இழுத்து மூடப்பட்டது தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம்

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையம் அடுத்த மூன்று தினங்களுக்கு மூடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் 42 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து இந்த நடவடிக்கை ☞2

## ரிஷாத் கைது: வெட்கக்கேடு!

அரசைத் தாக்குகின்றார் உலபனே சுமங்கல தேரர்



ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவைக் கைது ☞2



## மே தினம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுப்பதற்கு அரசு பிரயத்தனம்

ஜே.வி.பியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் குற்றச்சாட்டு

மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் எமது மே தினத்தை அனுஷ்டிப்போம் என உறுதி பூண்டுள்ளோம்.

- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் இ.சந்திரசேகர் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் யாழ். அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இம்முறை மே தினத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை நாங்கள் முன்னெடுத்து வருகின்றோம். எனினும், இந்த அரசானது எமது மே தின நிகழ்வுகளைத் தடை செய்வதற்குப் பல்வேறு விதத்திலும் முயன்று வருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணியினராகிய நாங்கள் எந்தத் தடை வந்தாலும் கொழும்பிலும் ஏனைய மாவட்டங்களிலும் எமது மே தினத்தை நினைவு கூருவோம் என உறுதி ☞2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## ரிஷாத்தின் கைதுக்கு எதிராக ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இந்தக் கைது அரசியல் நோக்கத்தின் அடிப்படையிலான கைதைப் போன்றே இடம்பெற்றது என்பதை வெளிப்படுத்துகின்றது.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள சமூகத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சி என்ற அடிப்படையில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் நீதி ஒருபோதும் வழங்கப்படாது என்பதைத் தயக்கமின்றி தெரிவிக்க முடியும். மாறாக நாடு அநீதியின் பாரம்பரியங்களுடன் விடப்படும்.

ஆதாரங்கள் அற்ற நபர்களைத் தண்டிப்பதற்கான கருவியாகப் பயங்கரவாத தடைச் சட்டத்தை அரசு பயன்படுத்துகின்றது - என்றுள்ளது.

## இழுத்து மூடப்பட்டது ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார மத்திய நிலைய வளாகத்தில் 190 பேருக்கு எழுந்தமானமாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனைகளில் 42 பேருக்குத் தொற்று உறுதியாகியுள்ளது.

இவ்வாறு தொற்று உறுதியானவர்களில் வர்த்தகர்கள், அதிர்ஷ்ட இலாபச் சீட்டு விற்பனையாளர்கள் மற்றும் கூலித் தொழிலாளர்களும் அடங்குகின்றனர் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

## ரிஷாத் கைது: ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்வதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாகவே நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைதுசெய்யப்பட்டுள்ளார். இது வெட்கக்கேடான செயலாகும்.

-இவ்வாறு ஊழல் எதிர்ப்பு முன்னணி அமைப்பின் தலைவர் உலபனே சுமங்கல தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஹரின் பெர்னாண்டோவைக் கைது செய்வதற்கான சூழலை அமைப்பதற்காக அரசு இந்த வெட்கக்கேடான செயலைச் செய்துள்ளது.

ரிஷாத் பதியுதீன், பஸில் ராஜபக்ஷவின் நெருங்கிய நண்பர். 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் ரிஷாத் பதியுதீனை அவருடைய விருப்பத்துக்கு ஏற்றவாறு சுதந்திரமாகச் செயற்பட பஸில் ராஜபக்ஷ அனுமதித்திருந்தார்.

ரிாத் பதியுதீன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும், ரவூப் ஹக்கீம் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசமைப்பின் 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்ததை நாங்கள் மறக்கவில்லை. இதனால் அரசு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20 ஐ நிறைவேற்றியிருந்தது என்பதையும் நாங்கள் மறக்கவில்லை. - என்றார்.

## மே தினம், முள்ளிவாய்க் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பூண்டுள்ளோம்.

மே மாதம் என்பது ஒரு விசேட மாதமாகும். மே தின நிகழ்வு மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெறும் மாதமாகும்.

எனினும், இந்த அரசானது தற்போது கொரோனா என்ற ஒரு மாயையை உருவாக்கி மே தின நிகழ்வு மற்றும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வைத் தடுக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்கள் வேறு நாட்டு மக்கள் இல்லை. எதிரி நாட்டுப் பிள்ளைகள் இல்லை. எங்களது உறவுகள் எங்களது சகோதரர்கள். அதனால் அந்தச் சகோதரர்களை நினைவுகூர்வதற்கு அந்த மக்களுக்கு உரிமை இருக்கின்றது. அந்த உரிமையை அரசு தொடர்ந்தும் மறுத்து வருகின்றது. இதற்கு எங்களுடைய வன்மையான கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் எதற்காகப் போராடினார்கள் என்பதல்ல பிரச்சினை. எதற்காகப் போராடினாலும் கூட அவர்கள் எமது நாட்டு மக்கள். அவர்கள் வேறு யாரும் அல்லர்.

உயிரிழந்த உறவுகளை மக்கள் நினைவுகூர்வதற்கு யாரும் தடுக்க முடியாது. எனவே, மக்களின் உரிமையை இந்த அரசு நிலைநிறுத்த வேண்டும் - என்றார்.

## அனைத்து நிகழ்வுக ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா தடுப்புச் சட்டத்தின் அடிப்படையில் குறித்த அறிவிப்பு வெளியிடப்படுவதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

## கொரியத் தூதுவருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வூன்ஜின் ஜியோங் ஆகியோருக்கு இடையே கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின்போது, கொரோனாத் தொற்றுநோயைக் கையாள்வதில் தென் கொரிய அரசு பயன்படுத்திய வழிமுறைகள் மற்றும் இலங்கையிலும் கொரோனா பரவுவதைக் குறைப்பதில் தென்கொரியாவின் அணுகுமுறையை எவ்வாறு கையாளலாம் என்பது குறித்து தூதர் சுகாதார அமைச்சருக்கு விளக்கி கூறினார்.

மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்பு குறித்து கொரிய அரசு இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு பாராட்டுகளை தெரிவித்த அமைச்சர், இது தொடர்பாக ஜனாதிபதி மற்றும் இலங்கை அரசு சார்பாக நன்றியையும் தூதுவருக்குத் தெரிவித்தார்.

## புதிய கொரோனா .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விசேடமாக இந்தியாவின் நிலைமையைக் கருத்தில்கொண்டு அனைவரும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் கொரோனாவின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தப் புதிய வகை கொரோனா வைரஸ், முன்னரைவிடவும் தீவிரமாகப் பரவும் தன்மை கொண்டது. இந்த வைரஸ், தொற்று ஏற்பட்டு அறிகுறிகள் தோன்றும்போது நோயாளியின் நுரையீரலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றது.

பிரிட்டனில் பரவி வரும் கொரோனா வைரஸை ஒத்த வைரஸே இலங்கையிலும் பரவுகின்றது எனத் தற்போது வரை மேற்கொள்ளப்பட்டுள்ள பரிசோதனைகளிலிருந்து அறியமுடிகின்றது. எனினும், உத்தியோகபூர்வ முடிவுகளை வெளியிட சில தினங்கள் ஆகலாம்.

எனினும், பொது மக்கள் அதுவரை, காத்திருக்காது சுகாதார விதிமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடித்து ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கின்றோம் - என்றார்.

## கட்டுநாயக்க விமான ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மாலை அறிவித்துள்ளது.

நாட்டில் நிலவும் கொரோனா வைரஸ் தொற்று தீவிரத் தன்மையை அடுத்து தற்காலிகமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வட்டுவாகலில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
என்னும் இளைஞன் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் வட்டுவாகல் பாலத்திற்கு அருகில் கடற்படையினரின் முகாம் முன்பாக இடம்பெற்றிருக்கின்றது.

நிலத்தில் கிடந்த வெடிபொருள் வெடித்துள்ளதாகக் கூறப்படுகிறது. சம்பவத்தில் இரு இளைஞர்களும் காயமடைந்த நிலையில் முல்லைத்தீவு வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டபோதும் ஒருவர் உயிரிழந்திருந்தமை உறுதி செய்யப்பட்டது.

காயமடைந்தவர்களில் ஒருவர் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தற்போது மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

## போதைப்பொருள்கள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 7 கிலோ கிராம் ஐஸ் மற்றும் 10 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

24, 26, 34 மற்றும் 38 வயதுடைய குருநகரைச் சேர்ந்த இருவரும் நீர்வேலி, கோப்பாயைச் சேர்ந்த தலா ஒருவருமே கைது செய்யப்படனர்.

கடற்தொழிலாளிகளான நால்வரிடமிருந்தும் கூலர் வாகனம் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நிஹால் பிரான்ஸ்ஸின் வழிகாட்டலில் உப பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான அணி இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தது.


விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் - kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம்- 076 443 8622

**மஞ்சள் கன்று விற்பனைக்கு**
1 1/2 மாத மஞ்சள் கன்று விற்பனைக்கு உண்டு. வீட்டிற்கு எடுத்து வந்து தரப்படும்.
தொடர்புகளுக்கு 021 492 7778

**கடை வாடகைக்கு தேவை**
யாழ்ப்பாணம் K.K.S .வீதியில் யாழ். இந்து கல்லூரி தொடக்கம் மருதனார் மடம் வரையான எல்லைக்குள் கடை ஒன்று வாடகைக்கு உடன் தேவை.
தொடர்புகளுக்கு - 0774135036

**தேவை**
கைதடியில் வீட்டில் தங்கி நின்று வேலை செய்ய பணிப்பெண் தேவை.
தொடர்புகளுக்கு 077 272 9651

**வேலையாட்கள் தேவை**
யாழ்ப்பாணத்தில் உள்ள குளிர்பான விநியோகஸ்த நிலையத்துக்கு SALES REP தேவை.
மாதம் 45,000 சம்பாதிக்கலாம்.
தொடர்புகளுக்கு 0774737737/ 0773257747





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# இந்த 'அளாப்பல்' வேண்டாம்!

வெறும் வாயால் அளாப்பதல் அல்லது மிகைப்படுத்திப் பேசுதல் என்பது அரசியலில் தவிர்க்க முடியாததுதான்.

கிடைத்த ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கிக் காட்டும் அளாப்பல், அரசியலுக்கும் அவசியம்தான். ஆனாலும் அந்த அளாப்பலுக்கும் கூட ஓர் அளவு இருக்க வேண்டும். அளவுக்கு மிஞ்சி மக்களின் காதில் பூச்சுற்றுவதாக அது அமையக் கூடாது.

"கூரை ஏறிக் கோழி பிடிக்க முடியாதவன் வானம் ஏறி வைக்குண்டம் போவேன் என்றானாம்" – என்பது போன்று அரசியல்வாதிகளின் அளாப்பல்கள் இருக்க கூடாது. ஓரளவுக்கேனும் மக்கள் நம்புபவையாக அவை இருக்க வேண்டும்.

தமது அரசியல் இறங்கு முகத்தில் – வீழ்ச்சி நிலையில் – இருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, இனிமேல் வரக்கூடிய மாகாண சபைத் தேர்தல்கள் தொடர்பில் வெளியிட்டிருக்கும் கணிப்பீடே இத்தகைய கருத்துக்களை நம்மை நினைவூட்ட வைத்துள்ளன.

"வடக்கில் மக்களின் வாக்குகள் பிளவுபடாதிருக்க நான் முதலமைச்சராவது அவசியம்" என்று கற்பனை உலகத்தில் இருந்து ஒரு நாளிதழுக்குப் பேட்டி அளித்திருக்கின்றார் அவர்.

கடந்த பொதுத் தேர்தலில் தனது கட்சிக்கு விழுந்த வாக்குகளிலேயே, ஐந்தில் ஒருவரின் விருப்பு வாக்குகளைக் கூட எடுக்க முடியாத துரதிஷ்டசாலித் தலைவர் அவர்.

கடந்த பொதுத் தேர்தலில் அவர் தலைமை வகித்த தமிழரசுக் கட்சிக்கு யாழ் தேர்தல் மாவட்டத்தில் விழுந்த வாக்குகள் ஆக 31 வீதம் மட்டும். அந்த 31 வீத வாக்குகளிலும் ஐந்தில் ஒரு பங்கு விருப்பு வாக்குக் கூட அவருக்குக் கிட்டவில்லை.

அவர் கட்சித் தலைவர். அவரது கட்சியின் பெயரில்தான் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. வேட்பாளர் பட்டியலின் தலைமை வேட்பாளர் அவர்தான். ஆனால் கிடைத்த இடமோ ஆறாவது. பத்து வேட்பாளர்களில் ஆறாவது இடம்தான்.

முழு மாவட்டத்திலும் முப்பது வீத வாக்குகளைப் பெற்ற கட்சியின் தலைமை வேட்பாளராக இருந்து, அந்த முப்பது வீத வாக்குகளில் ஐந்தில் ஒரு விருப்பு வாக்குகளைக் கூடப் பெற முடியாத கட்சித் தலைவர் "வாக்குகள் பிளவுபடாதிருக்க நான் முதலமைச்சராவது அவசியம்" என்று கதை விடுவது மிகப் பெரிய அளாப்பலின்றி வேறில்லை.

தம்மை சுய பரிசோதனை செய்யாமல், யதார்த்தத்தை உணராமல், ஏதோ பிதற்றுகின்றார் போலும் அவர்.

ஒரு சினிமாப் படத்தில் நகைச்சுவைக் காட்சி. காது குத்தும் நிகழ்வு நடக்க முன்னரே 'ஆடு அடிச்சாச்சா?', 'ஆடு அடிச்சாச்சா?' என்று ஆட்டிறைச்சிக் கறிக்காக நாவூற ஓடித் திரிவார் கவுண்டமணி. எது கேட்டாலும் 'ஆடு அடிச்சாச்சா?' என்று கேட்பார்.

காது குத்த முன்னரே ஆடு அடிப்பது பற்றிக் கவலைப்படும் கவுண்டமணி போல, மாகாண சபைத் தேர்தல் அறிவிக்கப்பட முன்னரே – அப்படி அறிவிக்கப்பட்டால் அதற்காகத் தமிழர் தரப்பை ஒன்றுபடுத்தும் முயற்சிகள் எடுக்கப்பட முன்னரே – தாம்தான் முதலமைச்சர் பதவிக்கான பொது வேட்பாளர் என்ற கனவுடன் துடிக்கின்றார் மாவை சேனாதிராசா.

மாகாண சபையைத் தமிழர் தரப்பு ஐயத்துக்கு இடமின்றிக் கைப்பற்றுவதை உறுதிப்படுத்துவதற்காக தமிழர் தரப்பை ஒன்றிணைக்க வேண்டும் என்று பேசப்படும்போது, தாம் முதல்வர் வேட்பாளராக களமிறக்கப்பட்டு வெல்வதற்கான வாய்ப்பாகவே அத்தகைய உத்தேச ஒற்றுமையைப் பயன்படுத்த வேண்டும் என்று அவர் துடிக்கின்றார்.

தம்மை முதல்வர் வேட்பாளராக்கி, தேர்தலில் தாம் வெல்ல வைக்கப்பட வேண்டும் என்பதற்காகத்தான் அவர் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்று விரும்புகின்றார். அதில் தமிழர் தரப்பு ஒன்றுபட்டுக் களமிறங்க வேண்டும் என்று துடிக்கின்றார்.

நாடாளுமன்றத் தேர்தலிலேயே மக்களால் நிராகரிக்கப்பட்டவர் அவர். தன் கட்சியின் தலைவராகவும், தன் கூட்டமைப்பின் தலைமை வேட்பாளராகவும், களமிறங்கிய அவருக்கு மக்கள் விருப்பு வாக்குகளை அளிக்காமல் ஆறாவது இடத்துக்குத் தள்ளிவிட்டனர்.

அத்தகையவர் தமிழ் மக்களின் ஒன்றுபட்ட எழுச்சிக்குப் பொது வேட்பாளர் என்பது அந்த ஒன்றுபடுத்தல் முயற்சிக்கு வைக்கப்படும் ஆப்பு அன்றி வேறில்லை.

தாம் இந்த மாகாணசபைத் தேர்தலில் ஒரு வேட்பாளர் என்ற கதையையே ஒதுக்கி வைத்துவிட்டு, உண்மையான தமிழரசுக் கட்சித் தலைவராக அவர் செயற்பட முன்வரவேண்டும். அது தான் அவருக்கும் நல்லது. அவரது கட்சிக்கும் நல்லது. தமிழர்களுக்கும் நல்லது.

# கொழும்பு துறைமுக பொருளாதார நகரம் வல்லரசுகளின் மோதல் தளமாக மாறாது

## அஜித் நிவாட் கப்ரால் உத்தரவாதம்



உத்தேச ஆணைக்குழு சட்டமூலத்துக்கு அமைய கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதே சிறந்ததென நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு உத்தேசஆணைக் குழு சட்டமூலத்துக்கு அமைய செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்போது, வல்லரசுகளுக்கிடையில் மோதல் தளமாக குறித்த தளம் மாற்றமடையாதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்துக்கான உத்தேச ஆணைக்குழு சட்டமூலம் நடைமுறைக்கு வருகின்றபோது சீன எதிர்ப்பு வல்லாதிக்க சக்திகள் ஒன்றாக இணைந்து எதிர்க்கும். இதில் இலங்கைக்கே அதிகளவு தாக்குதல்ஏற்படுவதற்குவாய்ப்பு உள்ளதென நாடாளுமன்ற உறுப்பினர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் குறித்த கருத்துக்கு பதிலளிக்கும் வகையிலேயே இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

மேலும் கொழும்பு துறைமுக பொருளாதார நகரத்தின் நிலம் இலங்கைக்கே உரித்துடையது. ஆகவே அதன் அதிகாரத்தை ஆணைக்குழுவிடம் கையளிக்கவே தீர்மானித்துள்ளோம். இதனூடாக நில உரிமை பறிபோகாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை குறித்த துறைமுக நகரில் ஏனைய நாடுகளும் முதலீடுகளை மேற்கொள்ள முடியும் எனவும் இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

# புதிய அரசமைப்பு உருவாகும் சாத்தியமில்லை; சந்தர்ப்பத்தை நழுவிட்டுவிட்டது கோட்டா அரசு

## விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவிப்பு



தற்போதைய அரசியல் சூழமைவுகளின் பிரகாரம் புதிய அரசமைப்பு உருவாக்குவதற்கு சாத்தியமில்லை என்று ஆளும் தரப்பின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான புதிய அரசாங்கமும் புதிய அரசமைப்பை உருவாக்குவதற்கான சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 20 ஆவது திருத்தச்சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றிக்கொண்டது. அதன்மூலம் ஜனாதிபதி இழந்த அதிகாரங்களை மீளப் பெற்றுக்கொண்டார்.

20 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்ட வேளையுடன் புதிய அரசமைப்பையும் ஓரிரு மாதங்களுக்குள்ளே நிறைவேற்றிவிட வேண்டும் என்று நான் ஆலோசனை வழங்கியிருந்தேன். ஆனால் ஆட்சியாளர்கள் அதில் அக்கறை காட்டியிருக்கவில்லை.

தற்போது ஆளும் தரப்பில் பல்வேறு பிளவுகள் ஏற்பட்டுள்ளன. துண்டுகளாக இயங்கும் நிலைமைகள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் புதிய அரசமைப்பை உருவாக்க முடியும் என்று நான் நம்பவில்லை.

வெறும் 44 உறுப்பினர்களைக் கொண்ட ஆளும் தரப்பு காணப்படும்போதே 19ஆவது திருத்தச்சட்டத்தைச் சமர்ப்பித்த நான் 215 பேரின் ஆதரவைப் பெற்று அதனை நிறைவேற்றியிருந்தேன்.

தற்போதைய அரசாங்கம் மூன்றிலிரண்டு பெரும்பான்மையை கையில் வைத்துக் கொண்டும் புதிய அரசமைப்புக்கான நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு முனைந்திருக்கவில்லை. - என்றார்.

அதேபோன்று மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கு முன்னதாகத் தேர்தல் முறைமையில் மாற்றம் ஏற்படுத்தப்படுமா என்று வினவிய போது, கொழும்பு துறைமுகநகர ஆணைக் குழு உத்தேச சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கும் வரையில் அவ்விதமான ஒரு விடயம் நடைபெறுகின்றது என்று ஆளும் தரப்பு உறுப்பினர்களான எமக்கு தெரியப் படுத்தப்படாமலே இருந்தது.

இவ்வாறு தான் ஆளும் கட்சி உறுப்பினர்கள் நடத்தப்படுகின்றனர். ஆகவே, தேர்தல் முறைமை தொடர்பில் என்ன செய்யப்போகின்றார்கள் என்று கூறமுடியாதுள்ளது.- என்றார்.

# சர்வதேச நிபுணர் கண்காணிப்புக் குழுவில் இலங்கை பிரதிநிதிகள் தவிர்க்கப்பட்டனர்

ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச நிபுணர்களின் பிரத்தியேக விசாரணை மற்றும் கண்காணிப்புக் குழுவில் இலங்கை பிரதிநிதித்துவம் தவிர்க்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இந்த முடிவுக்கு இலங்கை அரசாங்கம் முறையான பதிலை வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

உள்நாட்டு போருக்குப் பின்னர் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட ஐந்தாவது தீர்மானத்தின் விதிகளை விரைவாக அமுல்படுத்துவது தொடர்பாகப் பரிசீலித்து வருவதாக மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் சமீபத்தில் கூறியது.

அதன்படி போரின் போது மற்றும் அதற்குப் பிறகான மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தகவல் சேகரித்தல், பாதுகாத்தல் மற்றும் பகுப்பாய்வு ஆகியவை இதில் அடங்கும் என்று கூறப்படுகிறது.

அதன்படி, இலங்கையைக் கண்காணிக்க ஜெனிவாவைத் தளமாகக் கொண்ட சர்வதேச நிபுணர்களின் குழுவை மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் திரட்டி வருகின்றது.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, இந்த விசாரணைக் குழுவில் இலங்கையின் பிரதிநிதியைத் தவிர்ப்பதற்கான அவர்களின் முடிவு தொடர்பாகவும் அரசாங்கம் விரைவில் முறையான பதிலை அளிக்கும் எனக் கூறியுள்ளார்.

இருப்பினும் நிதிப்பற்றாக்குறை செயல்முறைகளை மேற்கோள்காட்டி சர்வதேச நிபுணர்கள் குழு பெரும்பாலும் ஜெனிவாவில் இருக்கும் என மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கூறியிருந்தது. இவ்வாறு பெயரிடப்பட்டவர்களில் பலர் இலங்கையின் கலாசாரம் மற்றும் பின்னணிக்கு அந்நியர்கள் என்பதால் அத்தரப்பினரால் வழங்கப்பட்ட ஆவணங்கள் மற்றும் தகவல்களின்படி செயற்படுவதை ஒருதலைப்பட்ச நடவடிக்கை என அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல சுட்டிக்காட்டினார்.

இலங்கை தொடர்பான ஐ.நா. உறுப்பு நாடுகளால் முன்வைக்கப்பட்ட நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை பாதுகாத்தல் என்ற தீர்மானம் இந்த ஆண்டு மார்ச் 23 அன்று ஜெனிவாவில் நடைபெற்ற 46 ஆவது அமர்வில் ஏற்றுக்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த தமிழகத்தில் நாளை முதல் புதிய நடைமுறைகள்

தமிழகத்தில் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்வதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தொற்றுப் பரவல் அதிகரித்ததைத் தொடர்ந்து இரவு நேர ஊரடங்கும் ஞாயிற்றுக்கிழமை முழு ஊரடங்கும் அமல்படுத்தப்பட்டுள்ளது. எனினும், கொரோனா பரவல் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே வருவதால் மேலும் சில கட்டுப்பாடுகளை விதிக்க தமிழக அரசு முடிவெடுத்துள்ளது.

அவசர கால முன்னெடுப்புகள் தொடர்பாக முதலமைச்சர் பழனிசாமியுடன் நேற்று பிற்பகலில் தலைமைச் செயலாளர் உள்ளிட்ட உயரதிகாரிகள் ஆலோசனை நடத்தியிருந்தனர். மக்களுக்கான சிரமங்களை ஓரளவுக்குக் குறைத்து, எவ்வாறான கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்தலாம் என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் அலசப்பட்டதாக தகவல்கள் வெளியாகின.

இதன் பின்னர் தமிழக அரசு புதிய கட்டுப்பாடுகள் தொடர்பான விவரங்களை வெளியிட்டுள்ளது.

பெரிய கடைகள், வணிக வளாகங்கள் போன்றவையும் மாநகராட்சிகள், நகராட்சிகளில் அழகு நிலையங்கள், சலூன்கள் போன்றவையும் இயங்குவதற்கான அனுமதி நிறுத்தப்பட்டுள்ளது. திரையரங்குகள், உடற்பயிற்சி, கேளிக்கைக் கூடங்கள் இயங்கவும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி தவிர்த்து பிற மாநிலங்களில் இருந்து தமிழகம் வருவதற்கு இ-பதிவு கட்டாயம் என அறிவிக்கப்பட்டள்ளது.

கோல்ப், டென்னிஸ் உள்ளிட்ட சகல விளையாட்டுச் சங்கங்களும் செயல்பட முடியாது என்றும் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமண நிகழ்ச்சிகளில் 50 நபர்களுக்கு மேலும், இறுதி ஊர்வலம், சடங்குகளில் 25 பேருக்கு மேலும் பங்கேற்க முடியாது என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. உணவகங்கள், தேநீர்க்கடைகளில் பொதி முறைக்கு மட்டுமே அனுமதி எனவும் அமர்ந்து சாப்பிட இயலாது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சகல வழிபாட்டுத் தலங்களிலும் பொதுமக்களுக்கு அனுமதி வழங்கப்படாது என்றும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றி முக்கிய சம்பிரதாயங்களை மட்டும் நடத்த அனுமதிப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அதேவேளை, பலசரக்கு, காய்கறிக் கடைகள் மற்றும் அத்தியாவசிய



தேவைகளுக்கான அனைத்துக் கடைகளும் இயங்கலாமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏழு மாதங்களுக்குப் பின்னர் முழு ஊரடங்கு வெறிச்சோடிச் காணப்படும் தமிழகச் சாலைகள்



தமிழகத்தில் இரவு நேர ஊரடங்கைத் தொடர்ந்து முதல் முழு ஊரடங்கு ஞாயிற்றுக்கிழமையான இன்று அமலுக்கு வந்தது. ஏற்கனவே கொரோனா முதல் அலையைக் கட்டுப்படுத்த 7 மாதங்களுக்கு முன்பு தொடர் ஊரடங்கு அமலில் இருந்தது. அதன் பின்னர் தமிழகத்தில் இன்று ஒருநாள் மட்டும் மீண்டும் முழு ஊரடங்கு கடைப்பிடிக்கப்படுகிறது.

முழு ஊரடங்கு காரணமாக தமிழகம் முழுவதும் காவல்துறையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளனர். அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. ஊரடங்குக் கட்டுப்பாடுகளை மீறி வாகனங்களில் சுற்றுவோர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டு வாகனங்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் பொலிஸார் எச்சரித்துள்ளனர். ஊரடங்கு காரணமாக சாலைகள் வெறிச்சோடிக் காணப்படுகின்றன.

இந்த ஊரடங்கு நாளை திங்கட்கிழமை காலை 4 மணி வரை அமலில் இருக்கும். சனி இரவு 10 மணி முதல் வழமையான இரவு ஊரடங்கோடு சேர்த்து தொடர்ச்சியாக தமிழகத்தில் 30 மணி நேர ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொவோக்சின் தடுப்பூசியும் விலை உயர்ந்தது!

நாடு முழுவதும் தடுப்பூசிக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் சீரம் இந்தியா நிறுவனம் கொவிஷீல்ட் தடுப்பூசியின் விலையை இருமடங்கு உயர்த்தியது. 250 ரூபாவுக்கு விற்கப்பட்டு வந்த ஒரு டோஸ் தடுப்பூசி, மாநில அரசுகளுக்கு 400 ரூபாவுக்கும் தனியார் மருத்துவமனைகளுக்கு 600 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுமென சீரம் நிறுவனம் அறிவித்தது.

ஏற்கனவே கொரோனா பாதிப்பால் இக்கட்டான சூழலில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கும் மாநில அரசுகள், தடுப்பூசி விலையேற்றத்தால் அதிருப்தி அடைந்தன. மத்திய அரசுக்கு ஒரு விலை மாநில அரசுக்கு ஒரு விலையா? என்ற கேள்வியும்




எழுந்தது. தடுப்பூசிகளை இலவசமாக வழங்க வேண்டுமென மாநில அரசுகள் மத்திய அரசிடம் கோரிக்கையும் விடுத்தன. இதனை பரிசீலித்த மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம், மாநில அரசுகளுக்கு கொவோக்சின் மற்றும் கொவிஷீல்டு தடுப்பூசிகளை இலவசமாக வழங்க முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளது. சீரம் நிறுவனத்திடம் தடுப்பூசிகள் நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு மாநில அரசுகளுக்கு இலவசமாக வழங்கப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில், அரசு மருத்துவமனைக்கு வழங்கப்படும் கொவாக்சின் தடுப்பூசி விலை 600 ரூபாவாகவும் தனியார் மருத்துவமனைகளுக்கு 1200 ரூபாவாகவும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக பாரத் பயோடெக் நிறுவனம் தெரிவித்துள்ளது. மற்றொரு தடுப்பூசியான கொவிஷீல்ட் விலை ஏற்கெனவே அதிகரிக்கப்பட்ட நிலையில் கொவாக்சின் விலையும் உயர்த்தப்பட்டுள்ளமை பலதரப்பிலும் விவாதத்துக்குள்ளாகியுள்ளது.

கொரோனாத் தடுப்பூசி விலை விவகாரத்தில்

## மத்திய அரசு மௌனம்! ப.சிதம்பரம் குற்றச்சாட்டு



'கொவிஷீல்ட்டின் விலை உயர்வை நியாயப்படுத்தியவர்கள் கோவாக்சின் விலை உயர்வையும் நியாயப்படுத்துவார்கள்!' – என முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார்.

கோவாக்சின் மருந்து மாநிலங்களுக்கு 600 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் என பாரத் பயோடெக் நிறுவனம் அறிவித்துள்ள நிலையில் டுவிட்டரில் பதிவிட்டுள்ள சிதம்பரம், தடுப்பூசி விலை விவகாரத்தில் மத்திய அரசு மௌனம் காப்பதாக தெரிவித்துள்ளார். இரு நிறுவனங்கள் இலாபம் ஈட்டுவதற்கு மத்திய அரசு உதவுதாகவும் குற்றஞ்சாட்டியுள்ள சிதம்பரம், 'ஏன் கட்டாய உரிமைச் சட்டத்தை அமல்படுத்தவில்லை?' – எனவும் கேள்வி எழுப்பியுள்ளார்.

## ஒக்சிஜன் விநியோக நடவடிக்கை

## மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளதாக மத்திய அமைச்சர் தகவல்; போதிய அளவில் இல்லை என டெல்லி முதலமைச்சர் பதிவு!



டெல்லியில் கொரோனா பாதிப்புகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. டெல்லியில் உள்ள மருத்துவமனைகள் ஒக்சிஜன் பற்றாக்குறையால் திணறி வருகின்றன.

இந்நிலையில், 'டெல்லி அரசு கேட்டதற்கும் கூடுதலாக ஒக்சிஜன் ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. அதற்கு டெல்லி முதலமைச்சரும் பிரதமருக்கு நன்றி தெரிவித்துள்ளார். ஒக்சிஜனை திட்டமிட்டு வழங்குவது என்பது இனி மாநில அரசுகளிடமே உள்ளது' என மத்திய சுகாதார அமைச்சர் ஹர்ச வர்தன் நேற்று தெரிவித்திருந்தார்.

ஆயினும், டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் வெளியிட்டுள்ள டுவிட்டர் செய்தியில், 'மேலதிகமாக உள்ள ஒக்சிஜன் சிலிண்டர்களை வழங்கி உதவும்படி பிற மாநில முதல்வர்கள் அனைவருக்கும் கடிதம் எழுதியுள்ளேன். எங்களுக்கு மத்திய அரசும் உதவி செய்து வருகிறது. எனினும், எங்களுக்கு கிடைக்க கூடிய அனைத்து உதவிகளும் போதிய அளவில் இல்லை என நிரூபிக்கும் வகையில் டெல்லியில் கொரோனா பாதிப்புகளின் தீவிரம் உள்ளது' என்று அவர் பதிவிட்டுட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

## ஒக்சிஜன் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான இறக்குமதி வரியை இரத்துச் செய்தது மத்திய அரசு

இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை தீவிரமடைந்து வருகிறது. பல்வேறு மாநிலங்களிலும் உள்ள மருத்துவமனைகளில் ஒக்சிஜன், தடுப்பூசி, படுக்கை வசதிகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டு வருகிறது. ஒக்சிஜன் தட்டுப்பாடு அதிகமாக இருப்பதால் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ள கொரோனா நோயாளிகள் உயிரிழக்கும் சம்பவங்களும் அரங்கேறி வருகின்றன.

இதற்கிடையில், மருத்துவமனைகளில் ஒக்சிஜன் விநியோகம் சீராக கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்த மத்திய, மாநில அரசுகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றன. சிங்கப்பூர், ஜேர்மனி உள்ளிட்ட வெளிநாடுகளில் இருந்தும் மருத்துவ ஒக்சிஜன் இறக்குமதி செய்ய மத்திய அரசு நடவடிக்கை எடுத்து வருவதாகச் சொல்லப்படுகிறது.

இந்நிலையில், நாட்டில் நிலவி வரும் ஒக்சிஜன் பற்றாக்குறையை போக்குவது தொடர்பாகவும், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகவும் பிரதமர் மோடி தலைமையில் உயர்மட்டக் குழுக் கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒக்சிஜன் மற்றும் ஒக்சிஜன் தொடர்பான மருத்துவ உபகரணங்கள் மீது விதிக்கப்பட்டு வந்த இறக்குமதி வரியை இரத்துச்செய்ய முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

அதேபோல், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் கொரோனா தடுப்பூசி மீதான இறக்குமதி வரியும் இரத்துச் செய்யப்பட்டுள்ளது. ஒக்சிஜன், ஒக்சிஜன் தொடர்பான உபகரணங்கள், கொரோனா தடுப்பூசி ஆகியவற்றுக்கான இறக்குமதி வரி இரத்து, அடுத்த மூன்று மாதங்களுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும் இந்த உத்தரவு உடனடியாக அமலுக்கு வருவதாகவும் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உலகலாவிய ரீதியில் இதுவரையும் 100 கோடி பேருக்கு கொரோனா தடுப்பூசி




உலகம் முழுவதும் கொரோனா வைரசின் பாதிப்பு கடந்த ஓராண்டுக்கு மேலாக நீடித்து வருகிறது. பல்வேறு நாடுகளில் கொரோனாவின் 2 ஆவது அலை தாக்கிக் கொண்டு இருக்கிறது.

கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த அமெரிக்கா, ரஷ்யா, சீனா, இங்கிலாந்து, இந்தியா உள்ளிட்ட நாடுகள் தடுப்பு மருந்துகளை கண்டுபிடித்துள்ளன.

அவற்றைத் தங்கள் நாட்டு மக்களுக்கு செலுத்தி வருகின்றன. அதே போல் தடுப்பு மருந்துகளை மற்ற நாடுகளும் வாங்கி மக்களுக்கு செலுத்தி வருகின்றன.

கொரோனாப் பாதிப்பை தடுப்பதில் தடுப்பு மருந்து முக்கிய பங்காற்றும் என்பதால் தடுப்பூசி செலுத்தும் பணியை உலக நாடுகள் தீவிரப்படுத்தி வருகின்றன.

இந்த தடுப்பூசி செலுத்தும் பணி கடந்த ஆண்டு மத்தியில் இருந்து நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே உலகளவில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை 100 கோடியை தாண்டியது. 207 நாடுகளில் 100 கோடியே 29 லட்சத்து 38 ஆயிரத்து 540 டோஸ் தடுப்பு மருந்துகள் செலுத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சமீபத்தில் அமெரிக்கா 20 கோடி பேருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டதாக தெரிவித்து இருந்தது. தற்போது கொரோனா வைரசின் பாதிப்பு அமெரிக்கா, இந்தியா, பிரேசில், ஐரோப்பிய நாடுகளில் அதிகரித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளவில் இதுவரை கொரோனா வைரஸுக்கு 14 கோடியே 70 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதில் 12 கோடியே 50 லட்சம் பேர் குணமடைந்து உள்ளனர். 18 லட்சம் பேர் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். 31 லட்சம் பேர் பலியாகி உள்ளனர்.

# கொரோனாவால் நிலைகுலைந்துள்ள இந்தியாவுக்கு அமெரிக்கா கூடுதல் உதவி



இந்தியாவில் கொரோனாவின் கோரத்தாண்டவம், சுகாதார கட்டமைப்புகளை கடுமையாக பாதித்துள்ளது. ஒக்சிஜன் பற்றாக்குறையால் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ள ஏராளமான நோயாளிகளின் உயிர் ஆபத்தில் உள்ளது. வட மாநிலங்களில் ஒக்சிஜன் பற்றாக்குறையால் பலர் இறந்துள்ளனர்.

ஒக்சிஜன் தேவையைப் பூர்த்தி செய்ய மத்திய அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இந்தியாவுக்கு உதவ அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகள் முன்வந்துள்ளன.

இந்நிலையில், கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவுக்கும் இந்திய மக்களுக்கும் துணை நிற்பதாக அமெரிக்க வெளியுறவுத்துறை மந்திரி அந்தோணி பிளிங்கன் கூறி உள்ளார்.

'இந்திய அரசாங்கத்தில் எங்கள் கூட்டாளர்களுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறோம். இந்திய மக்களுக்கும் நோய்த்தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள சுகாதார வீரர்களுக்கும் கூடுதல் ஆதரவை விரைவாக வழங்குவோம்' என அவர் தெரிவித்துள்ளார்.

'இந்தியாவில் கொரோனா தொற்றால் கடுமையாக பாதிப்பு ஏற்பட்டிருப்பதை அறிந்து, அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது. இந்த தொற்றுநோயை தைரியமாக எதிர்த்துப் போராடும் இந்தியாவில் உள்ள எங்கள் நண்பர்கள் மற்றும் கூட்டாளர்களுக்கு கூடுதல் பொருட்கள் மற்றும் ஆதரவை வழங்குவோம்' என வெள்ளை மாளிகை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேக் சல்லிவன் உறுதி அளித்துள்ளார்.

# இந்தோனேசியாவில் 3 நாட்களாக தேடப்பட்டு வந்த மாயமான நீர்மூழ்கி கப்பல் கண்டுபிடிப்பு

இந்தோனேசியாவில் 3 நாட்களாக தேடப்பட்டு வந்த மாயமான மூழ்கிப்போன நீர்மூழ்கி கப்பல் கண்டறிப்பட்டுள்ளது.

பாலி தீவு அருகே கடலில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த நீர் மூழ்கியைக் காணவில்லை என்று கடந்த புதன்கிழமை தேடுதல் வேட்டை முடுக்கி விடப்பட்டது. தற்போதைய நிலையில், இந்நீர்மூழ்கிக் கப்பல் கடலில் 2,ஆயிரத்து 788 அடி ஆழத்தில் மூழ்கிஉள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது இந்த நீர்மூழ்கி கப்பலின் திறனைக் காட்டிலும் மிக அதிகமான ஆழமாகும்.

அதில் இருந்த 53 மாலுமிகளும் தப்



பிப்பிழைப்பதற்கான வாய்ப்பு மிக மிகக் குறைவு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்கள் உயிரிழந்திருக்கலாம் என்ற கருதப்படுவதால் உடல்களை மீட்கும் பணி முடுக்கி விடப்பட்டுள்ளது.

# வீட்டின் மீது விழுந்து நொறுங்கிய ஹெலிக்கொப்டர் பச்சிளம் குழந்தை உள்பட 4 பேர் ஜிம்பாப்வேயில் பலி

தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்றான ஜிம்பாப்வேயின் கிழக்கு பகுதியில் உள்ள மனோனாலேண்ட் மாகாணத்திலிருந்து அந்த நாட்டு விமானப்படைக்கு சொந்தமான 'அகுஸ்தா பெல் 412' ரக ஹெலிகாப்டர் ஒன்று புறப்பட்டு சென்றது. ஹெலிகாப்டரில் 2 விமானிகளும் தொழில்நுட்ப ஊழியர் ஒருவரும் இருந்தனர். இந்த ஹெலிக்கொப்டர் மனோனாலேண்ட் மாகாணத்தின் ஆக்டூரஸ் நகரிலுள்ள ஹுகூரு என்ற கிராமத்துக்கு அருகே பறந்து கொண்டிருந்தபோது திடீரென விமானிகளின் கட்டுப்பாட்டை இழந்தது. இதையடுத்து ஹெலிக்கொப்டரை அங்குள்ள குடியிருப்பு பகுதியில் அவசரமாக தரையிறக்கவிமானிகள் முயற்சித்தனர்.

ஆனால் அவர்களின் கட்டுக்குள் வராத ஹெலிக்கொப்டர் அங்குள்ள ஒரு வீட்டின் மீது விழுந்து நொறுங்கியது.

இந்தக் கோர விபத்தில் ஹெலிக்கொப்டரில் இருந்த 3 பேரும் சம்பவ இடத்திலேயே பலியாகினர். அதுமட்டுமின்றி ஹெலிக்கொப்டர் விழுந்து நொறுங்கிய வீட்டில் இருந்த பச்சிளம் குழந்தை ஒன்று பரிதாபமாக உயிரிழந்தது.

அதேசமயம் அந்த குழந்தையின் தாயும், சகோதரியும் படுகாயங்களுடன் உயிர் தப்பினர். அவர்கள் மீட்கப்பட்டு சிகிச்சைக்காக ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டனர்.

இந்த கோர விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவராத நிலையில் இதுகுறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# இந்திய உருமாறிய கொரோனா சுவிட்சர்லாந்திக்கும் பரவியது

உலகம் முழுவதும் சுத்தி கொண்டிருக்கும் கொரோனா வைரஸ் மரபணு மாற்றம் அடைந்து உருமாறியது கண்டறியப்பட்டது. முதலில் இங்கிலாந்தில் உருமாறிய கொரோனா இருப்பது தெரியவந்தது.

அதே போல் தென் ஆப்பிரிக்கா, பிரேசில் ஆகிய நாடுகளிலும் கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்தது. இந்தியாவிலும் கொரோனா வைரஸ் உருமாற்றம் அடைந்து இருப்பது கண்டறியப்பட்டது.

இதற்கிடையே இந்தியாவில் உருமாறிய கொரோனா வைரஸ் சுவிட்சர்லாந்து நாட்டில் பரவி உள்ளதாக அந்த நாட்டு பொது சுகாதார ஆணையம் தெரிவித்து உள்ளது.

இது குறித்து சுவிட்சர்லாந்தின் பொது சுகாதார கூட்டாட்சி அலுவலகம் கூறும்போது, சுவிட்சர்லாந்தில் ஒருவர் இந்தியாவில் உருமாற்றம் அடைந்த வைரஸால் பாதிக்கப்பட்டு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்தியாவின் உருமாறிய வைரஸ் சுவிட்சர்லாந்துக்கு விமானத்தில் வந்த பயணி ஒருவருக்கு இருந்துள்ளது. அவரது ரத்த மாதிரிகளை கடந்த மாதம் சேகரித்து ஆய்வு செய்ததில் அவருக்கு இந்தியாவின் உருமாறிய கொரோனா இருப்பது தெரியவந்தது.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருவதால் பல்வேறு நாடுகள் பயணிகள் போக்குவரத்துக்கு தடை விதித்துள்ளன. அது போன்று சுவிட்சர்லாந்தும் கட்டுப்பாடுகளை விதிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# கொரோனாவால் எந்த அளவிற்கு அழிவை ஏற்படுத்த முடியும் என்பதை இந்தியாவின் நிலைவரம் நினைவுபடுத்துகிறது



கொரோனா வைரஸால் எந்த அளவுக்கு அழிவை ஏற்படுத்த முடியும் என்பதை, இந்தியாவில் கொரோனாவின் இரண்டாவது அலை நினைவுபடுத்துவதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

செய்தியாளர் சந்திப்பில் இதைத் தெரிவித்த அதன் தலைவர் டெட்ரோஸ் அதாநாம் கெப்ரிஷியஸ், வைரஸ் பரவலை தடுக்க இந்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளை வரவேற்பதாகவும் தெரிவித்தார்.

தடுப்பூசி உற்பத்தியை அதிகரிப்பதுடன், மக்கள் ஒன்றாக திரள்வதை தடுக்க இந்திய அரசு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் கூறினார்;

# லிபியாவில் இருந்து ஐரோப்பாவிற்குச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்து விபத்து; 130 பேர் வரை மாயம்



லிபியாவில் இருந்து ஐரோப்பாவிற்குச் சென்ற படகு நடுக்கடலில் கவிழ்ந்ததில் 130 பேர் வரை உயி ரிழந்திருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

திரிபோலியிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு புலம் பெயர்ந்து செல்வதற்காக நூற்றுக்கும் அதிகமானோர் காற்றடைத்த ரப்பர் படகுகளில் சென்றனர்.

மத்திய தரைக்கடல் பகுதியில் சென்று கொண்டிருந்த போது, படகு ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்தப் படகில் பயணம் செய்த 130 பேர் வரை நீரில் மூழ்கி மாயமாகினர். தகவலறிந்த ஓஸியன் வைக்கிங் என்ற கப்பலில் வந்தவர்கள் விபத்து நடந்த இடத்தில் 10க்கும் மேற்பட்டவர்களின் உடல்களைக் கைப்பற்றினர்.

எஞ்சியவர்களை தேடும் பணி நடந்து வருவதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மொட்டு அரசின் பீத்தலை மறைக்கும் எத்தனமாகவே தலைவர் ரிஷாத் பதியுதீன் பாவிக்கப்படுகின்றார்

## மக்கள் காங்கிரஸ் பிரதிநிதி ஷிபான் கண்டனம்



நாட்டிலே அண்மைக்காலமாக மொட்டு அரசு உட்கட்சி மோதல்களின் உக்கிரத்தினால் ஆட்டம் காண ஆரம்பித்திருக்கின்றது. அதனை சமப்படுத்தும் நோக்கத்துக்காகவே தலைவர் ரிஷாத் பதியுதீன் சனி நள்ளிரவு கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

உயிர்த்த ஞாயிறு விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரை அறிக்கையின் எந்த மூலையிலேனும் ஈஸ்டர் தின தாக்குதல்தாரிகளுடன் நேரடியாக தொடர்புகளை பேணினார் அல்லது அந்த சம்பவத்திற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ துணைபோனார் என்று தலைவர் ரிஷாத் பதியுதீன் மீது எந்தக் குற்றச்சாட்டும் எங்கும் பதிவானதாக தெரியவில்லை.

ஆகவே இதனை மிகப் பெரும் அரசியல் பழிவாங்கலாகவே நோக்க வேண்டியுள்ளது என கல்முனை மாநகர சபை அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பிலான உறுப்பினர் பீ.எம். ஷிபான் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில், அவர் மீண்டும் ஜனநாயகத்துக்கு விரோதமாக கைதாணையைக் காண்பிக்காமலும், கைதுக்கான காரணங்களை தெளிவுபடுத்தாமலும், ஒரு நாடாளுமன்ற உறுப்பினரின் சிறப்புரிமையை மீறி நடுநிசியில், அதிகார உச்சத்தில் மனிதாபிமானமின்றி கைது செய்யப்பட்டு இருப்பதனை வன்மையாகக் கண்டிக்கிறேன். வேண்டுமென்றே கைது செய்யப்பட்டு தடுத்து வைக் கப்பட்டிருக்கும் முன்னாள் ஆளுநர் ஆசாத் சாலி, உஸ்தாத் ஹஜ்ஜுல் அக்பர் வரிசையிலே தலைவர் ரிஷாட்த் பதியுதீனும் அவருடைய தம்பி றியாஜ் பதியுதீனும் இணைக்கப்பட்டுள்ளமை ரமழானுடைய மாதத்திலே இந்த நாட்டு முஸ்லிம் மக்களை வேதனையில் வாட்டுகிறது. - என்று குறிப்பிட்டுள்ளார்.

## மூத்த கவிஞர் தாமரைத்தீவானின் ‘முருகியம்’ நூல் வெளியீடு




ஈழத்தின் மூத்த கவிஞர் தாமரைத்தீவான் எழுதிய முருகியம் கவிதை இலக்கியம் நூல் வெளியீட்டு விழா நேற்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருகோணமலை - கிருஷ்ணபுரத்தில் இலக்கிய ஆர்வலர் ந.முருகானந்தம் தலைமையில் இடம் பெற்றது.

முருகானந்தம் தலைமையுரை வழங்கினார், நூலின் முதல் பிரதிகளை கவிஞர். மைக்கல் கொலின் மூத்த கவிஞர் கௌரிதாசனுக்கும், இலக்கிய ஆர்வலர் ந.முருகானந்தனுக்கும் வழங்கி வெளியீட்டு வைத்தனர்.

### பண்டிகை காலத்தை முன்னிட்டு

## கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் சாய்ந்தமருது வர்த்தகர்களுக்கு தெளிவூட்டல்

கொரோனா கட்டுப்பாடு தொடர்பில் வர்த்தகர்களுக்கு தெளிவூட்டும் கலந்துரையாடல் ஒன்று சனிக்கிழமை சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எம்.அல் அமீன் றிஷாத் தலைமையில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் நடைபெற்றது.

இதன்போது நாட்டில் பரவலாக அதிகரித்துவரும் கொரோனா அலையை கட்டுப்படுத்துவது தொடர்பில் விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் சாய்ந்தமருது பிரதேசங்களில் கொரோனா வைரஸ் தாக்கத்தை தடுப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நடவடிக்கைகள் குறித்தும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் ஆராயப்பட்டது. பண்டிகை காலத்தில் பொருள்கள் கொள்வனவின் போது பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றுவதை வர்த்தகர்கள் உறுதிப்படுத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டது.

மக்கள் நெரிசலாக கூடுவதை எவ்வாறு தவிர்க்கச் செய்வது என்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு, அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளும் கலந்துரையாடப்பட்டன. இதன்போது வர்த்தகர்களும் பொது மக்களும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்கு விதிகள் குறித்து சில முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

இக்கலந்துரையாடலில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம். ஆசிக், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஜே.எம்.நிஸ்தார், பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எல்.எம். பைலான், எம்.எம்.எம். பைசல், எம்.அஸ்லம், சாய்ந்தமருது வர்த்தக சங்கத் தலைவர் எம்.எஸ்.எம். முபாறக் அடங்கிய வர்த்தக சங்க நிர்வாகிகள், சாய்ந்தமருது வர்த்தகர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

### மட்டக்களப்பில் சிறுவர்களுக்கான

## ‘வினோதமான உல்லாச உலகம்’ எனும் சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா திறப்பு



சிறுவர் சிறுமியர்களுக்கான வினோதமான உல்லாச உலகம் எனும் சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா நேற்று சனிக்கிழமை மட்டக்களப்பில் வெகு விமர்சையாக திறந்துவைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாநகரத்தினை சிறுவர் சினேக நகரமாக மாற்றியமைக்கும் வேலைத்திட்டங்களை மட்டக்களப்பு மாநகர சபை முன்னெடுத்துவரும் நிலையில் மட்டக்களப்பில் தனியார் நிறுவனம் ஒன்று சமூக நலத்திட்டத்தின் ஒரு அங்கமாகவே குறித்த சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா அதன் பிரதித் தலைவர் எஸ்.நிரோசன் தலைமையில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார் .

நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், சிவஸ்ரீ ஜெகதீஸ்வரக் குருக்கள், அருட்தந்தை ராஜன் றொஹான், மௌலவி எஸ்.எச்.எம். ரமீஸ் ஹிபீஸ், ஆஞ்சநேயர் குறூப் ஒஃப் கம்பனியின் தலைவர் இ.சண்முகராஜா, மட்டக்களப்பு மாநகர முதல்வர் தி.சரவணபவன், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பதில் செயலாளர் ஜெயராஜ், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் மற்றும் வர்த்தக சங்க பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## கால்நடைகளை இழந்த பண்ணையாளருக்கு மாட்டுத் தொழுவம்





வாகரை மாங்கேணி பிரதேசத்தில் மின்னல் தாக்கத்தில் கால்நடைகளை இழந்த பண்ணையாளருக்கு மட்டக்களப்பு மாவட்ட கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மாட்டுத் தொழுவம் திறந்து வைக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வாகரை மாங்கேணி பிரதேசத்தில் கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 31ஆம் திகதி ஏற்பட்ட மின்னல் தாக்கத்தினால் 27 மாடுகள் உயிரிழந்து காணப்பட்ட நிலையில் மிகுதியான மாடுகளை பராமரிப்பதில் பண்ணையாளர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வந்தார்.

இந்த நிலையில் குறித்த பண்ணையாளரின் மிகுதியான கால்நடைகளை பராமரிக்கும் வகையில் பார்ம் ஹெமி நிறுவனம் மற்றும் கால் நடைகள் உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உத்தியோகத்தர்களின் நிதிப் பங்களிப்பில் மாட்டுத் தொழுவம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது மாட்டுத் தொழுவம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கிய பார்ம் ஹெமி நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உதித வணிகசிங்க பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.


இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

வேலைக்கு ஆட்கள் தேவை

நெல்லியடியில் இயங்கும் பிரபலமான புடவைக்கடை அன்ட் பான்சிக் கடைக்கு வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும். முன் அனுபவம் உள்ளவர்களுக்கு கூடிய சம்பளம் வழங்கப்படும். ஆண், பெண் இருபாலரும் தொடர்பு கொள்ளலாம்

021 226 3161
077 711 1001

வேலைவாய்ப்பு

பிரபல நிதி நிறுவனத்திற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்.

தகைமை - க.பொ.த. சா/த - கணிதம் உட்பட ஆறுபாடங்கள் சித்தி.

நேர்முகத் தேர்வு - 28/04/2021 (புதன்) காலை 9.00 மணி தொடக் கம் 1 மணி வரை.

மேலதிக தொடர்புகளுக்கு - 077 4605798


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். 2021 மிக நிதானமான துடுப்பாட்டம் கொல்கத்தா அணியை வென்றது ராஜஸ்தான்



ஐ.பி.எல். 2021 தொடரின் 18 ஆவது லீக் போட்டியில் கொல்கத்தா அணியை 6 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் அணி வென்றது.

நேற்று மும்பை வன்கடே மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தது.

முதலில் துடுப்பெடுத்தாடக் களமிங்கிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது. ராகுல் திரிபாதி 36 ஓட்டங்களையும் தினேஷ் கார்த்திக் 33 ஓட்டங்களையும் எடுத்தனர். ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியின் கிறிஸ் மோரிஸ் 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனையடுத்து 134 என்ற வெற்றி இலக்கோடு பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் அணி 18.5 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து மிக நிதானமாக வெற்றி இலக்கை அடைந்தது. அணித்தலைவர் சஞ்சு சம்ஸன் ஆட்டமிழக்காது 42 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 24 ஓட்டங்களையும் பெற்றனர். வருண் சக்ரவர்த்தி இரண்டு விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தப்போட்டியின் ஆட்ட நாயகனாக 4 விக்கெட்டுக்களை வீழ்த்திய கிறிஸ் மோரிஸ் தெரிவானார்.

நேற்றைய போட்டியின் முடிவோடு ராஜஸ்தான் அணி புள்ளிப் பட்டியலில் சிறிது முன்னேறி ஆறாமிடத்துக்கு நகர்ந்துள்ளது. கொல்கத்தா நைட் ரைடர்ஸ் இறுதி இடத்திலுள்ளது.



# இரட்டைச் சதமடித்தார் திமுத்!

இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரின் முதலாவது போட்டியில் இலங்கை அணியின் தலைவர் திமுத் கருணாரத்ன 244 ஓட்டங்களைப் பெற்றார்.

இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 7 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் 541 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது தனது இன்னிங்ஸை நிறைவுக்குக் கொண்டுவந்தது. நஜிமுல் ஹொஸைன் 163, மொமினுல் ஹக் 127 ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி திமுத் கருணாரத்னவின் 244, தனஞ்சய டி சில்வாவின் 166 ஓட்டங்களின் உதவியோடு 648 ஓட்டங்களைச் சேர்த்தது. 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் இந்த ஓட்ட எண்ணிக்கையோடு தனது முதல் இன்னிங்ஸை இலங்கை அணி நிறைவு செய்தது.



# உலக இளையோர் குத்துச்சண்டை சம்பியன்ஷிப்பில் இந்திய வீராங்கனைகள் 7 தங்கம் வென்று சாதனை

உலக இளையோர் குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டிகள் போலந்து நாட்டில் நடந்து வருகின்றன.

இதன் பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனைகள் ஜித்திகா (48 கிலோ எடைப் பிரிவு), பேபி ரோஜிசனா சானு (51 கிலோ), பூனம் (57 கிலோ), வின்கா (60 கிலோ), அருந்ததி சவுத்ரி (69 கிலோ), சனமச்சா சானு (75 கிலோ), அல்பியா பதான் (81 கிலோ) ஆகிய எழுவரும் தங்கம் வென்று புதிய சாதனையைப் படைத்தனர். இதன் மூலம் இந்திய பெண்கள் அணி முதலிடத்தையும் பிடித்தது.

இதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டு கவுகாத்தியில் நடந்த உலக இளையோர் சம்பியன்ஷிப் போட்டிகளில் இந்திய வீராங்கனைகள் 5 தங்கப் பதக்கங்களை வென்றதே அதிகபட்சமாக இருந்தது குறிப்பிடத்தக்கது.

# விமர்சனங்களை எதிர்கொள்ளும் சென்னை சேப்பாக்கம் ஆடுகளம்!



ஐ.பி.எல். கிரிக்கெட்டில் சென்னை சேப்பாக்கத்தில் நடந்த பஞ்சாப்புக்கு எதிரான ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 6 விக்கெட்டுகளுக்கு 131 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது.

திறமையான மும்பை துடுப்பாட்ட வீரர்கள் திணறியமையைச் சுட்டிகாட்டி சேப்பாக்கம் ஆடுகளத்தை விமர்சித்துள்ள பென் ஸ்டோக்ஸ், தனது டுவிட்டர் பக்கத்தில் 'ஐ.பி.எல். போன்ற பெரிய போட்டிகளில் ஆடுகளங்கள் மோசமானவையாக இருக்கக்கூடாது. குறைந்தது 160 - 170 ஓட்டங்கள் எடுக்கக்கூடிய ஆடுகளங்கள் தேவையே தவிர 130 - 140 ஓட்டங்களுக்குரிய ஆடுகளங்கள் அல்ல. இத்தகைய குறைந்த ஓட்டங்களை எடுக்கவைக்கும் ஆடுகளத்தை தூக்கி போடுங்கள்' என்று கூறியுள்ளார்.

இதே போல் ஆஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் பிரெட்லீ, 'உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால் இது ஓர் அதிர்ச்சிக்குரிய ஆடுகளம் தான். துடுப்பாட்ட வீரர்கள் இயல்பான ஆட்டத்தை வெளிப்படுத்த முடியாமல் தடுமாறுகிறார்கள். பந்து வீச்சாளாகளுக்கும் ஆடுகளம் கடினமாகவே இருக்கிறது. பந்து 'ஸ்விங்' ஆகவில்லை. எனவே இது சிறந்த ஆடுகளம் அல்ல' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

# பார்சிலோனா ஓபின் இறுதிப்போட்டி நடால் – சிட்சிபாஸ் இன்று மோதல்!



பார்சிலோனா ஓபின் டென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டியில் ஸ்பெயினின் ரபேல் நடால் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்துள்ளார்.

நேற்று நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் நடால், சகநாட்டு வீரரான பப்லோ கரெனோ பஸ்டாவை எதிர்கொண்டிருந்தார். இந்தப் போட்டியில் முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்திய நடால், 6 – 3, 6 – 2 என்ற நேர் செட்டுக்களில் வெற்றிபெற்று இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பைத் தனதாக்கிக் கொண்டார்.

இன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் கிரீஸின் சிட்சிபாஸை நடால் எதிர்கொள்கிறார்.

# ஐ.பி.எல்.2021 – இன்று இரண்டு போட்டிகள்

ஐ.பி.டில்.2021 தொடரில் இன்று இரண்டு போட்டிகள் இடம்பெறுகின்றன. முதலாவது போட்டி மும்பையில் நடைபெறுகிறது. இதில், மாலை 3.30க்கு ஆரம்பமான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ், ரோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிகள் விளையாடுகின்றன.

இரண்டாவது போட்டி இரவு 7.30க்கு ஆரம்பமாகிறது. சென்னையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் சன்ரைசஸ் ஹைதராபாத், டெல்லி கப்பிட்டல்ஸ் அணிகள் மோதவுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருந்ததி

+94 777 164 524

www.arunthathee.com

## இணைய திருமண சேவை

### மணமகன் விபரம்

| | | |
|---|---|---|
| **16261\|வே\|1996**<br>நயினாதீவு\|இந்து<br>IT Network Ass\|கொழும்பு<br>கேட்டை (விருச்சிகம்)<br>177 செ.மீ \|சூ.செ: 11 | **18211 \|வே \| 1995**<br>கரம்பொன்\| இந்து<br>Exec. at Bank\|கொழும்பு<br>ரோகிணி (இடபம்)<br>180 செ.மீ \|செவ் : 01 | **17880 \|வே\| 1994**<br>கல்வியங்காடு \|இந்து<br>Accountant \| UK<br>திருவோணம் (மகரம்)<br>176 செ.மீ \|செ.வ் : 07 |
| **16508\|வே\|1993**<br>காரைநகர் \|இந்து<br>Engineer\| சிங்கப்பூர்<br>பரணி (மேடம்)<br>175 செ.மீ | **17627 \|வே \| 1993**<br>உடுப்பிட்டி \| இந்து<br>Engineer\|சிங்கப்பூர்<br>பூசம் (கடகம்)<br>174 செ.மீ | **16544 \|வே\| 1992**<br>கரவெட்டி \|இந்து<br>QS\| யாழ்<br>விசாகம் (துலாம்)<br>176 செ.மீ \|செ.வ் : 08 |
| **17609\|கோ\|1992**<br>சுண்ணாகம் \|இந்து<br>Doctor\|கொழும்பு<br>மகம் (சிம்மம்)<br>182 செ.மீ \|செ: 7 | **17582 \|வே \| 1992**<br>காரைநகர் \| இந்து<br>Sen.Software Eng<br>உத்திரட்டாதி (மீனம்)<br>சிங்கப்பூர் \|செவ் : 12 | **18310 \|வே\| 1992**<br>பருத்தித்துறை \|இந்து<br>Bank Exec. \|வவுனியா<br>உத்தரம் (சிம்மம்)<br>171 செ.மீ |
| **15547 \|வே\| 1992**<br>திருநெல்வேலி \|இந்து<br>Doctor \| SL<br>பூசம் (சிம்மம்)<br>174 செ.மீ | **18511 \|வே \| 1991**<br>நல்லூர் \| இந்து<br>Software Eng\|கொழும்பு<br>உத்திரட்டாதி (மீனம்)<br>165 செ.மீ \|சூ.செ : 08 | **17063 \|வே\| 1991**<br>வடலியடைப்பு \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>பூரட்டாதி (கும்பம்)<br>170 செ.மீ \|சூ.செ : 08 |
| **17555 \|வே\| 1991**<br>சண்டிலிப்பாய் \|இந்து<br>Network Eng\|கொழும்பு<br>மூலம் (தனுசு)<br>183 செ.மீ \|சூ .செ: 6 | **16739 \|வே \| 1991**<br>கிளிநொச்சி \| இந்து<br>Ch.Accountant\|கட்டார்<br>அனுஷம் (விருச்சிகம்)<br>178 செ.மீ \|சூ.செ : 2 | **17357 \|வி\| 1991**<br>யாழ் நகர் \|இந்து<br>Engineer \| யாழ்<br>சதயம் (கும்பம்)<br>168 செ.மீ \|சூ.செ : 6 |
| **16532 \|வே\| 1991**<br>மானிப்பாய் \|இந்து<br>PHD Researcher\|Aus<br>அனுஷம் (விருச்சிகம்)<br>165 செ.மீ \|செ: 7 | **18235 \|வே \| 1991**<br>சாவகச்சேரி \| இந்து<br>Engineer\|வவுனியா<br>மிருகசீரிடம் (இடபம்)<br>174 செ.மீ | **16916 \|வே\| 1991**<br>திருநெல்வேலி \|இந்து<br>Software Eng\| கொழும்பு<br>பூசம் (கடகம்)<br>185 செ.மீ \|செ :12 |
| **15844 \|வே\| 1991**<br>உப்பிளான் \|இந்து<br>Doctor \| யாழ்<br>அத்தம் (கன்னி)<br>176 செ.மீ \| செ: 1 | **18379 \|வே \| 1990**<br>அளவெட்டி \| இந்து<br>Engineer \|யாழ்<br>சுவாதி (துலாம்)<br>182 செ.மீ \|செவ் : 7 | **17678 \|வே\| 1990**<br>பருத்தித்துறை \|இந்து<br>QS \| United Arab<br>கேட்டை (விருச்சிகம்)<br>179 செ.மீ \|செ : 07 |
| **18454 \|வே\| 1990**<br>காரைநகர் \|இந்து<br>System Eng \| சிங்கப்பூர்<br>உத்திரட்டாதி (மீனம்)<br>153 செ.மீ \|செ : 1 | **17576 \|வே\| 1989**<br>சுழிபுரம் \|இந்து<br>Doctor \| யாழ்<br>பூராடம் (தனுசு)<br>155 செ.மீ \| செ : 07 | **15541 \|வே\| 1989**<br>கொக்குவில் \|இந்து<br>Doctor \| கொழும்பு<br>பூரட்டாதி (கும்பம்)<br>180செ.மீ \|சூ-செ : 9 |

### மணமகள் விபரம்

| | | |
|---|---|---|
| **18565 \|ந \|1998**<br>யாழ் நகர் \|RC<br>2nd Year Medical \|யாழ்<br>சதயம் (கும்பம்)<br>165 செ.மீ | **17621 \|வே \| 1996**<br>கரம்பொன் \| இந்து<br>Software Eng\|கொழும்பு<br>ரேவதி (மீனம்)<br>165 செ.மீ | **16039 \|வே\| 1996**<br>கரவெட்டி \|இந்து<br>QS \| யாழ்<br>பூராடம் (தனுசு)<br>170 செ.மீ \|சூ.செ : 5 |
| **16210 \|வே\| 1995**<br>சாவகச்சேரி \|இந்து<br>Lecturer \| கொழும்பு<br>உத்தரம் (கன்னி)<br>165 செ.மீ \|செ: 4 | **15191 \|வே \| 1995**<br>யாழ் நகர் \| இந்து<br>English Teacher \|யாழ்<br>அத்தம் (கன்னி)<br>Divorced | **15709 \|வே\| 1995**<br>காரைநகர் \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>மூலம் (தனுசு)<br>155 செ.மீ \| Div |
| **17360 \|வே\| 1995**<br>சணள்டிலிப்பாய் \|இந்து<br>HR Exec.\| கொழும்பு<br>பூரம் (சிம்மம்)<br>168 செ.மீ \|செ: 2 | **15173 \|வே \| 1995**<br>வவுனியா \| இந்து<br>Research Assistant \|UK<br>ரேவதி (மீனம்)<br>164 செ.மீ | **17690 \|வே\| 1994**<br>இடைக்காடு \|இந்து<br>Teacher \| வவுனியா<br>பூரட்டாதி (கும்பம்)<br>160 செ.மீ \|செ : 7 |
| **15480 \|வே\| 1994**<br>புங்குடுதீவு \|இந்து<br>Mgmt Account Ass.<br>புனர்பூசம் (மிதுனம்)<br>கொழும்பு \|செ: 7 | **16243 \|வே \| 1994**<br>காரைநகர் \| இந்து<br>Dev. Officer \|Trinco<br>பூரம் (சிம்மம்)<br>155 செ.மீ \|செ : 8 | **16141 \|வே\| 1994**<br>பருத்தித்துறை \|இந்து<br>Doctor \| கொழும்பு<br>உத்தரம் (கன்னி)<br>171 செ.மீ |
| **17099 \|வே\| 1994**<br>கிளிநொச்சி \|இந்து<br>Manager\| யாழ்<br>அவிட்டம் (மகரம்)<br>158 செ.மீ \|சூ.செ: 10 | **18124 \|வே \| 1994**<br>மானிப்பாய் \| இந்து<br>Research Analyst<br>மகம் (சிம்மம்) \|கொழும்பு<br>158 செ.மீ \| சூ.செ : 03 | **15157 \|வே\| 1994**<br>காரைநகர் \|இந்து<br>Executive \| கொழும்பு<br>அஸ்வினி (மேடம்)<br>சூ.செ : 01 |
| **15673 \|வே\| 1994**<br>நுவரெலியா \|இந்து\|<br>Public Relation officer<br>அத்தம் (கன்னி) \| யாழ்<br>158 செ.மீ \|சூ.செ: 7 | **16958 \|வே \| 1993**<br>மாவிட்டபுரம்\| இந்து<br>Research Ass. \|யாழ்<br>மூலம் (தனுசு) \| Divorced<br>156 செ.மீ \|செவ் : 4 | **17914 \|வே\| 1993**<br>காரைநகர் \|இந்து<br>English Teacher \| யாழ்<br>கார்த்திகை (இடபம்)<br>150 செ.மீ \| செ : 1 |
| **16126 \|வே\| 1993**<br>யாழ் நகர் \|இந்து<br>Accountant \| கொழும்பு<br>ரேவதி (மீனம்)<br>162 செ.மீ \|சூ.செ: 6 | **16883 \|வே \| 1993**<br>தெல்லிப்பளை\| இந்து<br>Finance Exec.\|கொழும்பு<br>உத்தரட்டாதி (மீனம்)<br>165 செ.மீ \|செ : 7 | **17258 \|வே\| 1993**<br>மானிப்பாய் \|இந்து<br>Architecture \|கொழும்பு<br>பூராடம் (தனுசு)<br>167 செ.மீ |
| **16985 \|வே\| 1993**<br>நெல்லியடி \|இந்து<br>UK Civil Service \| UK<br>உத்தரம் (சிம்மம்)<br>162 செ.மீ | **17681 \|கோ \| 1993**<br>இணுவில் \| இந்து<br>Sen QA Eng\|கொழும்பு<br>பூரம் (சிம்மம்)<br>162 செ.மீ | **15335 \|வே\| 1993**<br>வேலணை \|இந்து<br>Coordinater \| கொழும்பு<br>கார்த்திகை (இடபம்)<br>163 செ.மீ |



தற்பொழுது விற்பனையில்
அரச தனியார் தொழில் புரியும் உள்நாட்டு,
வெளிநாட்டு 600 மணமக்கள் விபரங்களுடன்
*அருந்ததி திருமண இதழ் 23*

இணையத்தில் வாசிக்க
www.rebrand.ly/i23

உங்களுக்கு பொருத்தமான வரனின் பதிவு இலக்கத்தை (Profile No) Whatsapp 94777164524 இற்கு அனுப்பி குறித்த வரனின் முழுமையான விபரத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்

**வரன் தேடுவோம் வாருங்கள்**

*(திருமணத் தேடலை இலகுவாக்கும் முயற்சி)*

**25.04.2021 Marine Grand வெள்ளவத்தை காலை 09.00 மணிமுதல் 12.00 மணி வரை**

ஆயிரக்கணக்கான உள்நாட்டு வெளிநாட்டு அரச தனியார் தொழில் புரியும் மணமக்களிலிருந்து உங்களுக்கு பொருத்தமானவர்களை தேர்ந்தெடுக்க வாருங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார விதிமீறின் வவுனியா சந்தைச் செயற்பாடுகளை இராணுவத்தின் ஒத்துழைப்புடன் நடத்த வேண்டி வரும்!

## அரச அதிபர் எச்சரிக்கை



கொரோனா தொற்று நெருக்கடி நிலையில் சரியான சுகாதார நடைமுறைகளைப் பேணாவிட்டால் வவுனியா சந்தைச் செயற்பாடுகளை இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன் நடத்தவேண்டிவரும் என மாவட்ட அரச அதிபர் சமன் பந்துலசேன எச்சரித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்றைத் தடுப்பதற்கு முன்னெடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் தொடர்பாக விசேட கலந்துரையாடல் வவுனியா மாவட்ட செயலகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே அரச அதிபர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவித்த அவர் -

சந்தை வியாபாரிகள் மிகவும் கட்டுப்பாட்டுடன் இருக்க வேண்டும் எனவும் வெளிமாவட்டங்களில் இருந்தும் வியாபாரிகள் வருவதால் சந்தைத் தொகுதியில் ஒருவருக்கு வைரஸ் தொற்று ஏற்பட்டால் பாரிய விளைவுகள் ஏற்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இவ்வாறு இடம்பெற்றால் தினச் சந்தைச் செயற்பாடுகளை விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு மாற்றவேண்டி ஏற்படும் என்பதுடன் நடைமுறைகள் மீறப்படுமாயின் கமநலத் திணைக்களங்கம் ஊடாக இராணுவத்தின் உதவியைப் பெற்றுக்கொண்டு விவசாயிகளின் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை தாம் மேற்கொள்வார் எனவும அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

எனவே, தற்போதைய சூழலில் உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை, வவுனியாவில் சுகாதார நடைமுறைகளைப் பேணாமல் அதிகமான பயணிகள் பஸ்களில் ஏற்றப்படுவதாகக் குறித்த விசேட கூட்டத்தில் கல்வித் துறைசார் அதிகாரிகளால் குற்றஞ்சாட்டப்பட்டது.

எனவே, பொலிஸார் ஊடாக பஸ்களைக் கண்காணிப்பதற்கு ஒரு திட்டம் முறைப்படுத்தப்பட வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்நிலையில், பொதுப்போக்குவரத்து சேவைகளில் பஸ்களின் இருக்கைகளின் எண்ணிக்கைக்கு பயணிகளை ஏற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தவேண்டுமென அரச அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, இந்த விசேட கலந்துரையாடலில், வவுனியா மாவட்டத்தின் தற்போதைய நிலை மற்றும் கொரோனா தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள், புதிதாக வெளியிடப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது போன்ற விடயங்களும் விரிவாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பயணிகளின் பாதுகாப்பை அரசாங்கம் உறுதி செய்யும்

## அமைச்சர் காமினி லொக்குகே

மக்களின் பாதுகாப்பில் சமரசம் செய்ய அரசாங்கம் தயாராக இல்லை என போக்குவரத்து அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் புதிய சுகாதார வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறினால், பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் அவர்கள் மீது நடவடிக்கை எடுப்பார்கள் எனக் கூறினார்.

மேலும் அவர்களுக்காகக் குறைந்த வட்டியுடன் கூடிய கடன் வசதிகள் மற்றும் பல கட்டண குறைப்பு உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

இன்னும் மேலதிகமாக சலுகைகளை வழங்க அரசாங்கம் தயாராவதாகவும் அமைச்சர் காமினி லொக்குகே கூறினார்.

தனியார் பஸ் உரிமையாளர்கள் வழிகாட்டுதல்களை மீறுவதற்கும் பொதுமக்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கம் அனுமதிக்காது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# ரிஷாத் கைதுக்கு ஹக்கீம் கண்டனம்

முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியூதீன் கைது செய்யப்பட்டுள்ளமையின் ஊடாக, நாட்டின் சட்டவாட்சி அதல பாதாளத்துக்குச் சென்றுள்ளமையை உணர முடிந்துள்ளதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.



மேலும் இந்த ஜனநாயக விரோத செயற்பாட்டுக்கு கடும் கண்டனத்தை தெரிவிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ரவூப் ஹக்கீம், கடந்த சனிக்கிழமை வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு கண்டனம் தெரிவித்துள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

புனித ரமழான் மாதத்தின் நள்ளிரவில், ரிஷாத் பதியூதீன் சபாநாயகரின் அனுமதியோ நீதிமன்ற உத்தரவோ இன்றி பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிரடியாகக் கைது செய்யப்பட்டுள்ளமை மிகவும் கவலையளிக்கின்றது.

குறித்த செயற்பாடு அரசாங்கத்தின் நம்பகத்தன்மையை மேலும் கேள்விக்குறியாக்குகின்றது. மேலும் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் இடம்பெற்று 2 வருடங்கள் கடந்துவிட்ட நிலையில், விசாரணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டு அறிக்கைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

ஆனாலும் பேராயர் உள்ளிட்டோர் குறித்த அறிக்கை தொடர்பில் அதிருப்தி வெளிப்படுத்தியுள்ளமையுடன் அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்கள் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகின்றன.

அந்தவகையில் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சூத்திரதாரி யார் என்பதை மறைத்து, மக்களை திசைதிருப்பும் விதமாகவே இந்த கைதுகள் இடம்பெற்று வருகின்றன.

முஸ்லிம்கள் மத்தியில் பிரபலமான அரசியல்வாதிகளைத் தொடர்புபடுத்துவதன் வாயிலாக பெரும்பான்மைச் சமூகத்தினரிடையே முஸ்லிம் சமூகத்தின் மீது மேலும் வெறுப்புணர்வை ஏற்படுத்தும் முயற்சியாகவே இதனைப் பார்க்கத் தோன்றுகின்றது.

தேர்தலை நோக்காக கொண்டு அப்பாவி பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெறுவதற்காக இவ்வாறான கைதுகள் இடம்பெறுகின்றன. - என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

Australian Skilled Visa
Engineers (Civil & Mechanical), Nurses, Engineering Diploma holders in HNDE, NDES, NDT, C & G
Australian Skilled – Recognised Graduate Visa
BSc.Engg from University of Moratuwa or Peradeniya or Jaffna or Ruhuna
HOTLINE: 0766228891
தொடர்புகளுக்கு:-
Australian Migration Consultants
41, George R De Silva Mw, Colombo 13
0112437285, Email: sl.austvisa@gmail.com

INDIVIDUAL ENGLISH CLASSES

விசேடமாக Grammar With Spoken Practice
25 வருடமாக கொழும்பில் English Language Literature வகுப்புக்கள் நடத்திய ஆசிரியர் தற்போது யாழ் நகரில்.
K.GANESH (BA. Pera)
(G.C.E. O/L, A/L எடுத்தவர்கள், பட்டதாரி மாணவர்கள் (Including English Medium) பட்டதாரிகள், தொழில் புரிவோர் அனைவருக்கும் கற்பிக்கப்படும்.
யாழ். இந்துக்கல்லூரி அருகாமை
நீராவியடி, யாழ்ப்பாணம். 077 766 8725

வேலையாட்கள் தேவை
சுன்னாகத்தில் இயங்கும் பிரபல உணவகமொன்றிற்கு கீழ்க்காணும் வேலையாட்கள் தேவை.
- றொட்டி, கிழங்கு றொட்டி, சமோசா, றோல்ஸ் தயாரிப்பவர்.
- இடியப்பம், புட்டு, தோசை தயாரிப்பவர்.
- சமையல் உதவியாளர்கள்.
- சுத்திகரிப்பு செய்பவர்கள்.

* ஆண், பெண் இருபாலரும் தொடர்புகொள்ளலாம்.
* வெளி மாவட்டத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் இலவசம்.
077 652 9583

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.04.2021இல் வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org